**Form ID : BLA 2**

# அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது மாநில அரசியல் கட்சியால் வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிக்க அதிகாரமளிக்கப்பட்ட நபர்களால் வாக்குச்சாவடி நிலை முகவராக நியமிக்கப்பட்டவரின் பெயர் குறித்த தகவல்.

பெறுநர்

நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் / வாக்குச்சாவடி நிலை அலுவலர்

வாக்காளர் பட்டியல் பாகம் எண் ..........................................

.................................................................................தொகுதி

பொருள்: வாக்காளர் பட்டியல் திருத்தம் – வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (Booth Level Agents) நியமனம்

ஐயா,

வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 19.11.2008 நாளிட்ட கடித எண். 23/BLA/2008/ERS இல் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, எங்கள் கட்சியால் எனக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ........................................................................... சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பட்டியலின் பாகம் எண். ............................................... க்கு வாக்குச்சாவடி நிலை முகவராக திரு/திருமதி/ செல்வி ...........................................................................ஐ நான் நியமிக்கிறேன். 1–1–20––ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது, வாக்காளர் பதிவு அதிகாரியால் நியமனம் செய்யப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் / வாக்குச்சாவடி நிலை அலுவலரிடமிருந்து சம்பந்தப்பட்ட பாகத்தின் வரைவு / இறுதி வாக்காளர் பட்டியலின் அச்சிட்ட நகலினை கட்சியின் சார்பில் அவர் பெற்றுக்கொள்வார்.

2. அவருடைய பெயர் வாக்காளர் பட்டியலின் இந்த பாகத்தில் வரிசை எண். ,..........................இல் சேர்க்கப்பட்டுள்ளது. அவர் இந்த பாகத்தில் அடங்கியுள்ள பகுதிகளை நன்கறிந்தவர் மற்றும் வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளை சரி பார்க்கத் தகுந்தவராவார்.

(1) திரு/திருமதி/செல்வி ...........................................................................................................இன் மாதிரி கையொப்பம்.

(1)........................................................(2) ..................................................3) ...........................................................

தங்கள் நம்பிக்கையுள்ள,

(கட்சியால்அதிகாரமளிக்கப்பட்டுள்ள
நபரின் பெயர் மற்றும் கையொப்பம்)

இடம்:
நாள்: (கட்சியின் முத்திரை)

குறிப்பு:

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து, பெயர் சேர்க்க / நீக்க / திருத்த மனு அளிப்பதற்கான கால அவகாசத்தின் இறுதி நாள் வரையிலான கால கட்டத்தில் வாக்காளர் பட்டியலின் பாகத்திற்கு வாக்காளர் பதிவு அதிகாரியால் நியமிக்கப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் / வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடத்தில் இப்படிவம் கொடுக்கப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டவர்ளால் படிவத்தில் மையால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். ரப்பர் ஸ்டாம்பு/ஃபேஸிமிலி கையொப்பங்கள் ஏற்கப்பட மாட்டா.

3. இப்படிவம் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் / வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் நேரடியாகக் கொடுக்கப்பட வேண்டும்.